## இந்திய அரசமைப்புச் சட்டம் வலியுறுத்திடும் 'சமத்துவம்' திராவிடக் கருத்துகளின் பிரதிபலிப்பே!

# அறிவியல் மனப்பாங்கினை வளர்த்திட மாணவர் சமுதாயம் முன்வர வேண்டும்!

## சென்னை இராணிமேரி கல்லூரி வரலாற்றுத் துறை கருத்தரங்கை தொடங்கி வைத்து கி.வீரமணி உரை!

**சென்னை, மார்ச் 14 -**

**"அறிவியல் மனப்பாங்கினை வளர்த்திடும் கடமையை ஆற்றிட மாணவர் சமுதாயம் முன்வர வேண்டும்" என்று சென்னை இராணிமேரி கல்லூரி வரலாற்றுத் துறை கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசுகையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டார்.**

சென்னை இராணி மேரி (தன்னாட்சி) கல்லூரியின் வரலாற்றுத் துறையும், திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யமும் (Dravidian Historical Research Centre) இணைந்து 'திராவிடக் கருத்தியலும் இந்திய அரசியலமைப்புச் சட்டமும்' என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கினை நடத்தினர். 12.2.2025 அன்று கல்லூரியின் பொன்விழா அரங்கத்தில் நடைபெற்ற சுருத்தரங்கினை பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் வேந்தரும், திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் புரவலருமான ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் முனைவர் உமா மகேஸ்வரி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தரும், திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் தலைவருமான பேராசிரியர் முனைவர் பெ.ஜெகதீசன் உரையாற்றினார்.

### இரண்டு அமர்வுகள்

தொடக்க நிகழ்ச்சியைத் தொடர்ந்து கருத்தரங்கின் முதல் அமர்வில், 'திராவிடக் கருத்தியலும், பிரிட்டிஷ் இந்தியச் சட்டங்களும் சுதந்திரத்திற்கு முன்பு' என்ற தலைப்பில் உயர்நீதிமன்ற வழக்குரைஞரும், திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளருமான வழக்கறிஞர் அ.அருள்மொழி உரையாற்றினார்.

அடுத்த அமர்வில், 'திராவிடக் கருத்தியலும் இந்திய அரசியலமைப்புச் சட்டமும்' (சுதந்திரத்திற்குப் பின்) என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் முனைவர் ராமு மணிவண்ணன், சென்னை விவே கானந்தா கல்லூரி வரலாற்றுத் துறையின் மேனான் தலைவரும், திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் துணைத் தலைவருமான பேராசிரியர் அ.கருணானந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து பெரியார் மணியம்மை நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர் - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

118 ஆண்டுகள் கல்வி புகட்டி வரும், கல்லூரி முதல்வர் குறிப்பிட்டதைப் போல தமிழ்நாடு அரசு நடத்தி வரும் முதல் பெண்கள் கல்லூரியும், எறக்குறைய 5000 பெண்கள் உயர்கல்வி பயிலும், 750 பெண் ஆசிரியைகள் கல்வி புகட்டி வரும் இராணி மேரி (தன்னாட்சி) கல்லூரியில் முதல் முதலாக உரையாற்றிடும் வாய்ப்பு பெற்றதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1950களில் நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவராகப் பயின்ற காலத்தில் இதே கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியை ராஜேஸ்வரி அவர்கள் எழுதிய, 'சூரியன்' எனும் புத்தகத்தை பல்கலைக்கழக நூலகத்தில் படித்த நினைவு எனக்கு வருகிறது.

தந்தை பெரியார் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு, அவர் காண விரும்பிய சமூக மாற்றம் என்பது இந்தக் கல்லூரியில் நடைபெற்றுள்ளது. பெண்களுக்கு கல்வி எதற்கு? என்ற கேள்வி கேட்கப்பட்ட நிலையிலிருந்து பெண்களுக்கான தனிக் கல்லூரி, பெண் ஆசிரியப் பெருமக்கள், பெண் மாணவர்கள், முழுவதும் பெண்களாலேயே கல்வி நிர்வாகம் செய்திடக்கூடிய நிலைமைகள் பெரியார் காண விரும்பிய சமூக மாற்றமாகும். இங்கு கல்வி பயின்ற, பயிலும் மாணவியர் புத்தகங்களை மட்டும் படிப்பவர்கள் அல்ல; புத்துலகம் படைத்து வரும் ஏவுகணைகள் ஆவார்கள்.

### உறுதிமொழி அரசமைப்புச் சட்டம்

இந்த நாட்டில் ஊராட்சி மன்றங்களிலிருந்து தொடங்கி மாவட்ட பஞ்சாய்த்து நிலை; மாநில சட்டமன்றங்கள், நாடு முழுமைக்குமான நாடாளுமன்றம் ஆகியவற்றில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அனைவரும் பதவி ஏற்றிடும் பொழுது 'இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மீது தான்' உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள். அதன் பொருள் அரசமைப்புச் சட்ட விதிகளின்படி நடந்திடவும், அதன் நோக்கங்களை நிறைவேற்றிடும் வகையில் பணியாற்றிடவும் உறுதி ஏற்றுக் கொள்வதாகும்.

அந்த அரசமைப்புச் சட்டத்தில் யாருமே மாற்றம் செய்ய முடியாத சில அடிப்படைக் கட்டுமானப் பிரிவுகள் உள்ளன. அத்தகைய பிரிவுகளில் முதன்மையானதாக, சட்டத்தின் முகப்புரை (Preamble) உள்ளது. அந்த முகப்புரையில் உள்ளடக்கமே திராவிடக் கருத்தியலின் சாரமாக உள்ளது. இந்திய நாட்டு மக்களாகிய நாம் (We the people of India) எனத் தொடங்கும் முகப்புரை, நடைமுறையில் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் களங்களில் நீதி வழங்குவதை உறுதி செய்வதுடன். சுதந்திரம்; சமத்துவம், சகோதரத்துவம் இவற்றையும் மக்களிடையே உறுதி செய்திடுவதாக உள்ளது.

'அனைவரும் சமம், அனைவருக்கும் அனைத்தும்' என்பதுதான் திராவிடக் கருத்தியலின் மய்யமாகும். இந்திய அரசமைப்புச் சட்ட உருவாக்க வரைவுக் குழுவின் தலைவராக இருந்த அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுவார்; "முகப்புரையில் உள்ள 'சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம்' ஆகிய மூன்றும் பலர் நினைப்பதைப் போல, பிரெஞ்சுப் புரட்சியின்பொழுது பரவலாக நிலைபெற்ற கருத்தியலிலிருந்து எடுக்கப்பட்டது அல்ல; அவை அனைத்தும் நம் நாட்டின் முதல் பகுத்தறிவாளராக விளங்கிய புத்தரின் போதனைகளிலிருந்து பெறப்பட்டவை ஆகும்" என்பார்.



சென்னை இராணி மேரி கல்லூரியும் திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யமும் இணைந்து "திராவிடக் கருத்தியலும் இந்திய அரசியலமைப்புச் சட்டமும்" என்ற தலைப்பில் நடத்திய தேசிய கருத்தரங்கத்தினைத் தொடங்கி வைத்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பங்கேற்ற கி.வீரமணி அவர்களுக்கு நினைவு பரிசும் வழங்கி கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் பா. உமாமகேஸ்வரி பாராட்டினார். நிகழ்ச்சியில் திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் தலைவர் பேராசிரியர் பெ.ஜெகதீசன், துணைத் தலைவர் பேராசிரியர் அ. கருணானந்தன், பேராசிரியர் ராமு மணிவண்ணன், வழக்குரைஞர் அருள்மொழி, கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.தேன்மொழி ஆகியோர் கலந்து கொண்டனர் .

### காலாவதியாவதை கைவிட வேண்டும்

எழுத்தறிவுள்ளவர்களை ஆங்கிலத்தில் 'Literate' என்றும், எழுத்தறிவில்லாதவர்களை illiterate' எனக் கூறுவார்கள். ஆனால், அறிஞர் ஆல்வின் டோப்ஃளர் (Alvin Toffler) குறிப்பிடுவார். "The Illiterate of the 21st Century Will not be those who cannot read and write but those who cannot learn, unlearn and relearn" (21ஆம் நூற்றாண்டில் எழுத்தறிவற்றவர்கள் என்பது படிக்க எழுதத் தெரியாத மக்களை மட்டும் குறிக்காது; கூடுதலாக கற்றுக்கொள்ள முடியாதவர்களையும் கற்றுக் கொண்ட சிலவற்றை கழற்றிவிட்டு அதற்குப் பின் மறுபடியும் கற்றுக் கொள்ளத் தெரியாதவர்களையும் சேர்த்துக் குறிக்கும்.)

அந்த வகையில் தனி மனிதருக்கு தவறு, சமுதாயத்திற்கு தீங்கிழைக்கும் எனக் கருதியவற்றை கடைப்பிடிக்கப்படுவதை புறந்தள்ள வேண்டும். மருந்து கடைக்குச் சென்று மருந்து வாங்குகிறோம். அதில் காலாவதி நாள் என்பதாக ஒரு குறிப்பு ஒட்டப்பட்டிருக்கும். காலாவதியான மருந்தை வாங்குவது எவ்வளவு முட்டாள்தனமானதோ, அதைப் போல காலாவதியான கருத்துகளை, பழக்க வழக்கங்களைக் கைவிடாததுமாகும். இதைத்தான் திராவிடக் கருத்தியல் வலியுறுத்துகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டமானது, ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள அடிப்படை உரிமையைப் போலவே அடிப்படைக் கடமைகளை வலியுறுத்துகிறது. கடமையை மறந்த, கடமையை மறுத்த நிலையில் உரிமை கோருவதில் நியாயம் இருக்காது; அது நிலைத்திடவும் முடியாது. சட்டப் பிரிவு 51A குடிமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைக் கடமையைக் குறிப்பிடுகிறது. அவற்றுள் துணை பிரிவு 52A(h) கூறுகிற அடிப்படைக் கடமையாவது:

It shall be the duty of every citizen of the country to develop scientific temper, humanism and spirit of inquiry and reform. (அறிவியல் மனப்பாங்கினை, மனித நேயத்தை வளர்ப்பதுவும், அதைப் போலவே கேள்வி கேட்டு தெளிவு பெறக் கூடிய பண்பினையும், சீர்திருத்தப் பண்பினையும் வளர்ப்பதுவும் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படைக் கடமையாகும்.)

இந்த அடிப்படைக் கடமையை இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறுவதற்கு முன்பிருந்தே திராவிடக் கருத்தியலில் இது இடம் பெற்று மக்களிடையே பரப்பி வருகிறது திராவிட இயக்கம்; அதன் தத்துவத் தலைவராக இருக்கக் கூடியவர் தந்தை பெரியார்.

### அனுமார் வழிபாட்டால் அமெரிக்கா செல்ல விசா கிடைக்குமா?

நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள், அவை செய்தியாக ஊடகங்களில் வெளிவருகின்ற நிலைமைகள் அரசமைப்புச் சட்டம் வலியுறுத்திடும் அறிவியல் மனப்பாங்கினை வளர்ப்பதாக இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு தமிழ் நாளிதழில் வெளிவந்த செய்தி இது.

அண்மையில் அமெரிக்க நாட்டில் டிரம்ப் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த நிலையில் சட்ட விரோதமாக அமெரிக்க நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டினரை வெளியேற்றிடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால், சட்டரீதியாக (இரண்டு நாட்டு சட்டங்கள்) அமெரிக்கா சென்றிட 'விசா' வழங்குவது குறித்து எந்தவொரு குறிப்பிடத்தக்க மாற்றத்தினை அமெரிக்க அரசு வலியுறுத்திடவில்லை.

இந்த நிலையில் கல்வி கற்றிடவும், முறைப்படி நம் நாட்டிலுள்ள பன்னாட்டு நிறுவங்களில் பணியிட மாறுதலில் சென்றிடவும், அமெரிக்க நாட்டு நிறுவனத்தில் பணியாற்றிடும் உத்தரவு பெற்ற நிலையிலும் சுற்றுலா சென்றுவர உள்ள 'விசா' பெறுவதிலும் இதுவரை எந்தப் புதிய அறிவிப்பும் வெளிவரவில்லை.

விசா வழங்குவது என்பது விசாவிற்கு விண்ணப்பிப்பவர் தகுதியும், விசா வழங்கிடும் நாட்டு விதிகளின்படியும் நடைபெறுவதாகும். தேவையில்லாமல், எந்தவித அறிவியல் சிந்தனையும் இல்லாமல், குஜராத்தில் உள்ள அனுமன் கோவில் ஒன்றில் 'விசா' கிடைப்பதற்கு வேண்டிக் கொள்ள பக்தர்கள் கூட்டம் பெருகிவருகிறது என்பதாக அந்த நாளிதழில் செய்தி வெளிவந்துள்ளது.

இது அறிவியல் மனப்பாங்கினை மூட்டை கட்டி ஓரங்கட்டும் செயலன்றி வேறென்ன? செய்தி ஊடகங்கள் இதை பரப்பிடுவது இந்திய அரசியல் சட்டம் வலியுறுத்தும் அடிப்படைக் கடமைக்குப் புறம்பானவை அல்லவா? ஆட்சி அதிகாரத்தில் உள்ளோர் இதனைக் காணாமல், சுவனத்தில் கொள்ளாமல் இருப்பது நியாயமா?

இப்படிப்பட்ட செய்திகளை மாணவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மாற்றம் வேண்டிட நினைப்பவர்கள். அதனை எதிர்த்திடும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் நடைமுறையினை ஏற்றிடும் மனநிலையில்தான் இருப்பார்கள். மாணவர்கள் நினைத்தால் இதில் உள்ள, சமுதாயத்தில் புரையோடியுள்ள, அறிவியலுக்குப் புறம்பான நிலைகளை புறந்தள்ளிட, கருத்தியல் மாற்றத்தினை ஏற்படுத்திட முடியும். மாணவர்களிடம் அத்தகைய ஆற்றல் உள்ளது.

மனிதர்களிடையே நிலவிடும் பேதம் அகற்றப்பட வேண்டும். 1+4 ஜாதிப் படிநிலை முறையினை வலியுறுத்திடும் மனுஸ்மிருதி மறுக்கப்பட வேண்டும். சமத்துவம் ஏற்பட எடுத்துக் கூறும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது மனுஸ்மிருதி. 1+4 ஜாதிப் படிநிலைக்கும் கீழான நிலையில் பெண்களை வைத்துள்ளது மனுஸ்மிருதி. இந்த இழிநிலையினை மாணவியர் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று இந்த பெரிய அரங்கத்தில் ஏறக்குறைய 300 மாணவியருக்கும் மேலே அமர்ந்து இந்த உரையினை கேட்பதற்கு அறிவியல் கருவியான ஒலிபெருக்கி உள்ளது. இந்த நிகழ்ச்சியினை ஒளிப்படம் எடுத்தும், நேரலையின் மூலம் பலரும் பார்த்திடும் வகையில் உள்ளதும், அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்டது. அதன் முழுப் பயனை பெற்றிட அடுத்த கட்ட வளர்ச்சிக்கு சென்றிட, அறிவியல் மனப்பாங்கினை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

திராவிடர் ஆரியர் என்பது இரத்த பரிசோதனையால் வந்ததல்ல. பண்பாட்டு அடிப்படையில் தான் பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. திராவிடம் என்பது சமத்துவத்தை சுயமரியாதையை காப்பாற்றுவதை, பகுத்தறிவுச் சிந்தனையுடன் செயல்பட வைப்பது, மற்றது மனிதரை பேதப்படுத்திப் பார்ப்பது. திராவிடப் பண்பாடு தொடர்ந்து எடுத்துச் செல்லப்பட வேண்டியது. அந்தப் பணியினை திராவிடர் இயக்கங்களது படையினர் நடத்திச் செல்லப்படும் பொழுது முதல் நிலையில் உள்ளவர்களை 'sappers and miners' என்பார்கள். அதாவது படையினர் செல்லுவதில் உள்ள தடங்கல்களை தகர்த்திடுபவர்கள் எரிப்பவர்கள் என்று பொருள். அதைப் போல சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு சமத்துவத்திற்கு சம வாய்ப்பு கிடைப்பதற்கு உள்ள தடங்கல்களைத் தகர்த்து எரியும். "sappers and miners" ஆக திராவிட இயக்கம் செயல்பட்டு வருகிறது.

பெண்கள் மணமாகி கணவரின் இல்லத்திற்குள் நுழையும்பொழுது 'வலது காலை முதலில் எடுத்து வை' என அழுத்தம் தரப்படும் அறிவியலுக்குப் புறம்பான கருத்துகளுக்கு முற்றுப் புள்ளி வைத்திட வேண்டும்.

அறிவியல் மனப்பாங்கு நிறைந்தவர்களாய் அறிவியல் வளர்ச்சியுடன், மூடநம்பிக்கைகளைக் களைந்து முன்னேற்றம் காண மாணவியர் முன்வர வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி குறிப்பிட்டார்.

### வழக்குரைஞர் அ.அருள்மொழி!

சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் அ.அருள்மொழி ஆற்றிய உரை வருமாறு:

பெண்கள் அறிவியல் கருத்துகளை, உண்மைகளைக் கற்றுக் கொள்வதுடன் அறிவியல் மனப்பாங்கு உடையவர்களாக மாற வேண்டும். இத்தகைய முன்னேற்றப் போக்கு பெண்களுக்கு சமுதாயத்தில் உள்ள சமநிலை அற்ற நிலையினை போக்கிட உதவும் பெண்கள் அடிமை நிலையிலிருந்து விடுபட முடியும்.

பழைமைவாத சமுதாயத்தில் திருமணமான பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறக்கவில்லை என்றால் அந்தப் பெண்ணை தள்ளி வைத்துவிட்டு இரண்டாம் தாரமாக பெண்ணை மணந்து கொள்ளும் வழக்கம் நிலவியது. தற்பொழுதும் ஆண் குழந்தை காரணமாக பெண்களை திட்டித் தீர்த்திடும் வழக்கமும் உள்ளது. அறிவியல் அடிப்படையில் குழந்தை பிறப்பதற்கு ஆண், பெண் இருவரின் சேர்க்கை அவசியம். மரபணு அடிப்படையில் ஆண்களின் உடலில் 'XY' எனும் இரட்டை குரோமோசோமும், பெண்களில் உடலில் XX எனும் குரோமோ சோமும் உள்ளது.

இனப்பெருக்க உயிர் அணுக்களில் ஆணுக்கு 'X' என்றும், Y என்றும் இரு நிலையும், பெண்களின் இனப்பெருக்க உயிர் அணுக்களில் 'X' என்ற ஒரே தரப்பட்ட நிலையும் உள்ளது. இந்த இரண்டு வகை இனப்பெருக்கம் ஆண் பெண் சேர்க்கையில் வரும்பொழுது அதன் விளைவு 'XY' என்ற ஆண் குழந்தை பிறப்பதற்கும், 'XX' என்ற பெண் குழந்தை பிறப்பதற்கும் வாய்ப்பு உண்டு. ஆண் குழந்தை பிறப்பதற்கு 'Y' என்ற இனப்பெருக்க உயிர் அணுவை தரவல்லவர்கள் ஆண்கள் மட்டுமே, பெண்கள் அல்ல. இந்த அறிவியல் உண்மையை அறிந்து கொண்டால், ஆண் குழந்தை பிறக்காமல் இருப்பதற்கு பெண்கள் காரணமல்ல; ஆண்கள்தான் என்ற உண்மை நிலை தெரியவரும். எனவே இவை போன்ற அறிவியல் செய்திகள் அறிந்து அறிவியல் மனப்பாங்குடன் வாழ்ந்திட மாணவியர் முன்வர வேண்டும்.

இவ்வாறு வழக்குரைஞர் அ.அருள்மொழி தமது உரையில் குறிப்பிட்டார்.

### பேராசிரியர் ராமு.மணிவண்ணன்!

அரசியல் அறிவியல் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் ராமு.மணிவண்ணன் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

மேனாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒன்றிய அரசு மற்றும் நிறுவனப் பணிகளில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு கிடைக்க ஆணை பிறப்பித்தார். அதற்காகவே பிரதமர் பதவியை இழந்தார். பதவியை இழந்தவுடன் வி.பி.சிங் அவர்களிடம் 343 நாட்கள் மட்டும் பிரதமராக இருந்துள்ளீர்கள் என்ற விமர்சனம் வைக்கப்பட்ட பொழுது எத்தனை நாள்கள் பதவியில் இருந்தோம் என்பதை விட என்ன செய்தோம் என்பதுதான் முக்கியம். அந்த வகையில் முதன்முறையாக ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்த வகையில் அவர்களையும் நாட்டை ஆட்சி செய்திடும் அதிகாரத்தில் பங்கேற்க வைத்து நாட்டின் எதிர்கால மக்கள் ஒற்றுமைக்கு அடித்தளம் அமைத்தேன்' என பதிலுரைத்தார். இந்திய அரசமைப்புச் சட்டம் வலியுறுத்திடும் சமூக நீதியைக் காத்திட்ட காவலராக சுதந்திரம் பெற்ற பின்னர் முக்கியப் பணியினை முடித்தார் அந்தப் பெருமகனார்.

இவ்வாறு பேராசிரியர் ராமு.மணிவண்ணன் தமது உரையில் குறிப்பிட்டார்.

### பேராசிரியர் ஆ.கருணானந்தன்!

திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் துணைத் தலைவர் அ.கருணானந்தன் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

பிரிட்டிஷ் இந்திய ஆட்சிக் காலத்தில் கல்வி என்பது ஒரு வகுப்பினரான உயர் ஜாதியினருக்கே என்ற நிலையினை மாற்றியது மெக்காலே பரிந்துரையில் நடைமுறைக்கு வந்த அனைவருக்குமான கல்வி முறையே.

கடந்த காலத்திற்கு புனிதம் கற்பித்ததால் கல்வி முறை அனைவருக்கும் ஆனதாக இல்லை. இதிலிருந்து மீட்சி பெற பழைமைச் சிந்தனையினை போக்கிட திராவிடக் கருத்தியல் பெருக வேண்டும். ஆங்கில ஆட்சியில் முன்னேற்றம் என்பது Proclamation என்ற நிலையில் இருந்தது. இன்று விடுதலை பெற்ற நாட்டில் Legislation எனும் சட்டமியற்றும் நிலை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு உண்மையில் முன்னேற்றம், சமத்துவ நிலை ஏற்படும் வகையில் தங்களது பணியினை தொடர்ந்திட வேண்டும்.

இவ்வாறு பேராசிரியர் அ.கருணானந்தன் உரையாற்றும்பொழுது குறிப்பிட்டார்

### பேராசிரியர் மு தேன்மொழி!

கருத்தரங்கத்தின் ஒருங்கிணைப்பாளரும், வரலாற்றுத் துறையின் இணைப் பேராசிரியரும், திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் இணைச் செயலாளருமான முனைவர் மு.தேன்மொழி நன்றியுரை கூறினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் விதமாக இராணி மேரி கல்லூரி, வரலாற்று துறையும், திராவிட வரலாற்று ஆய்வு மய்யமும் இணைந்து நடத்திய திராவிட கருத்தியலும் இந்திய அரசியலமைப்புச் சட்டமும் என்ற கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது. சமூகத்தில் பின்தங்கிய மக்கள் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட , தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்று முதன்முதலாக 1916ல் எடுத்துக் கூறிய வரலாற்று ஆவணம் தான் Non Brahmin Manifesto பிராமணர் அல்லாதவரின் அறிக்கை, இதை ஒரு Magna Carta என்று அழைக்கப்படுகின்றது .

இதைத்தொடர்ந்து, நீதிக்கட்சி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட கம்யூனல் GO வில் தொடங்கி, தமிழ்நாட்டில் சமூக நீதி இயக்கம் நீண்ட தூரம் வந்துள்ளது .இதைத்தொடர்ந்து இட ஒதுக்கீட்டிற்கான கோரிக்கை ஜனநாயக தேவையாக முன்வைக்கப்பட்டது . 1921ல் சட்டப்பேரவையில் ஓ. தனிக்காச்சலம் செட்டியார் பிராமணர் அல்லாதவர்களுக்கு அரசு அலுவலகங்களில் 66% இடஒதுக்கீடு இருக்க வேண்டும் என்றார். இந்த தீர்மானத்தை வழிமொழிந்தவர் நடேசன் முதலியார் *பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் வரி இல்லை*என்ற அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் முழக்கத்தை எழுப்பினார்.

இந்த கம்யூனல் GO விற்கு எதிராக State of Madras vs Champaka Dorirajan case 1951 என்ற வழக்கு நடைபெற்ற. Communal GO is unconstitutional. This GO violates Indian constitution article 29 (2) என்ற வாதம் மு ன்வைக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த கம்யூனல் G O வை திராவிட சமுதாயம் மட்டுமல்ல மானிட சமுதாயத்திற்கே இது சுதந்திர சாசனம் என்று குறிப்பிட்டுள்ளார். கம்யூனல் GO வை காக்க நடந்த போராட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் பல்வேறு கட்சியை சார்ந்தவர்கள் கலந்து கொண்டதன் விளைவு முதல் சட்ட திருத்தம் நடைபெற்றது. இந்திய அரசியலமைப்பு பிரிவின் 15 (4) 16 (4 ) made special provisions of socially and educationally backward, சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின் தங்கிய குடிமக்கள் அல்லது பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக எந்த ஒரு சிறப்பு ஏற்பாட்டையும் செய்வதிலிருந்து மாநிலத்தை ஒன்றிய அரசு தடுக்காது என்ற சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

சமூகநீதியை நிலை நிறுத்துவதில் நீதிக்கட்சியின் அரசாங்கத்தின் பங்கு அளப்பரியது, குறிப்பாக அவர்களுடைய அரசாங்க ஆணைகள் பின்னாளில் அரசியல் அமைப்பு சட்டம் மற்றும் மற்ற மாநிலங்களிலும் சட்டமாக மாறி இருக்கின்றது . அரசு ஆணை எண் 29 மூலம் இந்து அறநிலைய சட்டம் கோயில் வருவாயை சுரண்ட கூடியவர்களிடமிருந்து காப்பாற்றியது.

அடுத்ததாக அரசு ஆணை 636, 1922ல் சென்னை சட்டமன்றத்தில் டிசி தங்கவேலுப் பிள்ளை என்னும் நீதிக்கட்சி உறுப்பினர் முன்மொழிந்தார். இந்த தீர்மானத்தை அரசு ஆணை எண் 636ன் மூலம் மாணவர்களை கல்லூரியில் சேர்க்க குழுக்கள் admission committee நியமித்து,

நீதிக்கட்சியின் முன்னணி தலைவர்கள் பலர் இக்குழுவில் இடம்பெற்று, கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்த மாணவர்கள் சேர்க்க தம் உழைப்பை நல்கினார்கள்.

சென்னை public service commission உருவாக்கல், அரசு அலுவல் நியமனங்களை ஒருமுகப்படுத்த அலுவலர் தேர்வு வாரியம் நீதிக்கட்சி அரசால் அமைக்கப்பட்டது .இந்திய கவர்னர் ஜெனரல் ஒப்புதல் பெற்று GO எண் 484 சட்டம் 18.10.1929 இல் நிறைவேற்றப்பட்டது .

1938 இல் காங்கிரஸ் ஆட்சியின் பொழுது நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் சிறைக்கு சென்றவர்களை கிரிமினல் குற்றவாளிகளாக கருதி அரசாங்க வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டதை சுட்டிக்காட்டி, தென்னிந்திய நல உரிமை சங்க தலைவர் தந்தை பெரியார் அவர்கள் சென்னை தலைமைச் செயலாளருக்கு ஒரு விளக்கக் கடிதத்தை அனுப்பினார், இதைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர் டி ஆஸ்டின் அரசு ஆணை 206 படி இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அரசு பணிகளில் நியமிக்க தடை ஏதுமில்லை , என சென்னை ஆளுநர் அவர்கள் தெளிவுப்படுத்தி அறிவுறுத்தியிறுந்தார் .

திராவிட கருத்தியல் சிந்தனைகளான சமூக , பொருளாதார, அரசியல் நீதி, சமத்துவம் , பகுத்தறிவு , மதசார்பற்றதன்மை, எல்லோருக்கும் சமமான கல்வி , பெண்ணுரிமை ஆகியவை இந்திய அரசியல் அமைப்பு சட்டங்களிலும் கொண்டுவரப்பட்டுள்ளது, குறிப்பாக நீதி கட்சியின் ஆட்சியில் அரசு ஆணை 108 ன் படி 10. 05.1921 அன்று பெண்களுக்கு இருந்த தடையை நீக்கி முதன்முதலாக சென்னை மாகாணத்தில் பெண்கள் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை பெற்றார்கள், அதேபோல் பெண்கள் பரம்பரை சொத்தில் நேரடியாக பங்கு பெற முடியும் என்று 7 .5 .1989 வரலாற்று சிறப்புமிக்க பெண்களுக்குரிய சொத்துரிமை தீர்மானம் சட்டமாக நிறை வேற்றினார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ,இந்த இந்த தருணத்தில் பெண்களின் சொத்துரிமை குறித்து தந்தை பெரியார் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியது நினைவு கூரத்தக்கது.

இந்த கருத்தரங்கத்தின் மூலம் மாணவர்கள் எடுத்துச் செல்ல வேண்டிய கருத்து என்பது

*எதிலும் சமத்துவம், அனைவருக்கும் சம வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற கொள்கை

*தனி மனித சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும்

*தனிமனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

*ஜனநாயகத்தை என்றென்றும் போற்றிட வேண்டும், ஏனென்றால் சிறந்த அரசியல் கோட்பாடுகளை கொண்டது ஜனநாயக அரசு தான் என்பதை வரலாறு நமக்கு உணர்த்தி இருக்கின்றது அதேபோல், இந்தியா என்ற பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டில் கூட்டாட்சி முறையே சிறந்தது. இத்தகைய கோட்பாடுகளை உருக்குலைப்பதை இளைய சமூகம் என்றென்றும் அனுமதிக்க கூடாது. அதேபோல், இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் குறிப்பிடாத ஒன்று "சாதி ஒழிப்பு" அரசியல் சட்ட சாதனத்தில் தீண்டாமை தான் ஒழிக்கப் பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது ஆனால், சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை .எனவே மாணவர்கள் சிந்தித்து தமிழர்களின் வாழ்வியலில் சாதி என்பது இல்லை, செய்யும் தொழிலில் கூட வேற்றுமை கற்பிக்கக் கூடாது என்பது தான் வள்ளுவரின் வாக்கு. எனவே,அறிவியல் மனபாங்கினை வளர்த்திடும் அடிப்படைக் கடமையினை ஆற்றிட மாணவர் சமுதாயம் முன் வரவேண்டும், மாணவர்கள் இந்தக் கருத்தரங்கத்தின் மூலம், இதை ஒரு படிப்பினையாக எடுத்து செல்ல வேண்டும் என்பது தான் எங்களின் எண்ணமாக இருக்கின்றது.

இவ்வாறு பேராசிரியர் மு.தேன்மொழி நன்றி கூறி பேசும்போது குறிப்பிட்டார்.